**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

**VOLUME – III** **ISSUE - II**

FEB – 2026 **E-ISSN : 2584 – 1238**

# சித்தர் இலக்கியமும் பிள்ளைப்பேறும்

**முனைவர்பீ. பெரியசாமி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

டாக்டர்எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம்கலைக்கல்லூரி,

ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா

மின்னஞ்சல்: periyaswamydeva@gmail.com

கைபேசி: 9345315385

https://orcid.org/0000-0002-7395-9699

DOI 10.5281/zenodo.18723791.

## Abstract

Siddha literature has been in our tradition for ages. The same goes for Siddha medicine. But in today's time, we can see that it has become a secondary tertiary form of medicine. The main reason for this situation is the advent of allopathic medicine and the fascination with the West. The main reason for all this is the superstition that our medical system is unscientific. Our system of medicine is also scientific. This article has been written to prove that the Siddhas are also medically knowledgeable. This includes the Siddhas' theory of embryo, the way the embryo develops, the stages of development of the foetus, whether the fetus was a male or female? Knowing . This research article examines the factors that contribute to the longevity of the newborn and the reasons for the defective birth of the child.

## Keywords

Siddha, Siddha medicine, Siddha literature, Embryo, Childbirth,

## முன்னுரை

சித்தர் இலக்கியம் என்பது வாழ்வியல், கலை, பண்பாடு, மருத்துவம், யோகம் எனப் பல்வேறு செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் பிள்ளைப்பேறு குறித்த பதிவுகள் எவ்வாறு அமைந்துள்ளன. உயிரணுக்கள், கரு உற்பத்தி, கரு வளர்ச்சி, ஆண் பெண் பாலின மாற்றம், நீண்ட ஆயுளுக்கான வழிகள், குழந்தை ஊனமாக பிறப்பதன் காரணிகள், இன்றைய நிலையில் சித்த மருத்துவம் வளர்ச்சி அடையாமைக்கான காரணம் போன்றவற்றை இக்கட்டுரை ஆராயவுள்ளது. இதன்வழி சித்தர்களின் பெருமையும் சித்த மருத்துவத்தின் தேவையையும் சித்தர்களின் மருத்துவ அறிவியல் அறிவையும் நம்மால் அறிந்து கொள்ள முடியும்.



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

## சித்த மருத்துவம்

சித்த மருத்துவம் என்பது மிகவும் பழமையான மருத்துவ முறையாகும். பின் விளைவுகள் அற்ற உணவே மருந்து மருந்தே உணவு எனும் அடிப்படையிலானது. எளிதில் கிடைக்கும் இலைகள், வேர்கள், காய்கள், பழங்கள், விதைகள், மரப்பட்டைகள் போன்றவற்றைக் கொண்டு இதற்குரிய மருந்துகள் உருவாக்கப்படுகின்றன. இவைகள் நம் உடலுக்கும் மனதுக்கும் வலுசேர்க்கக் கூடியவையாகவும் நமக்கு வரும் நோய்களைத் தடுக்க கூடியதாகவும் அமைந்துள்ளன. இதனை,

> **சித்தர்கள் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் எனும் நான்கு துறைகளிலும் மிகவும் முனைந்து தாம் கண்ட அனுபவங்களையும், தங்கள் நூல்களில் விரிவாக உரைத்ததோடல்லாமல், தாங்கள் அடைந்த யோக ஞான அடிப்படையில் வாதம் நிகழ்த்தும்போது தான் கண்ட உண்மைகளையும், இரகசியங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். தம் ஆன்ம சக்தி இல்லையேல் எந்த பொருளினது ஓர் அணுக்கூட மாற்றம் அடைய முடியாது என்ற உண்மையை வெளிப்படையாக உரைத்தனர். ஆன்மசித்தி பெற்றவர்களுக்குச் செய்ய இயலாத செயல் யாதும் இல்லை என்றும், தீராது என்று நூல்களில் சாதாரண அனுபவமும் காட்டும் பெரிய பெரிய நோய்களும் தம்மால் தவறாமல் தீர்க்க முடியும் என்றும், தம் நூலில் மிகத்தெளிவாகக் கூறியுள்ளனர். இத்தகைய சித்தர்களின் செயலால்தான் உலகம் நல்ல வண்ணம் இயங்குகின்றது என்பதையும் அறிவித்துள்ளனர். (க.சு. உத்தமராயன், தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், ப.314)**

என்ற உத்தமராயனின் கூற்றுவழி அறியலாம்.

## சித்த மருத்துவ தோற்றம்

உடலில் உண்டாகும் நோயின் நிலையையும், அதற்குரிய மருந்தையும், நோய் அணுகாமல் காப்பதற்கான வழிமுறைகளையும், மனித உடலை நீண்ட நாள் நோயின்றி காப்பதற்கு உரிய வழிமுறைகளையும், இளமையோடு இருப்பதற்குரிய மருத்துவமும், கற்றவர்களாக சித்தர்கள் இருந்தனர். அதுமட்டுமன்றி, இதனை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறி வழி காட்டினர். ஆனால், இம்மருத்துவமுறை எப்போது தோன்றியது என்பது குறித்த


http://Creativecommons.org//license/by/4.0/.

தெளிவான முடிவு ஏதும் இதுவரை எட்டடபடவில்லை. சித்தர்களின் மருத்துவமுறையின் சிறப்பினை,

> **சித்தர்கள் கண்ட செய்முறை மருந்துகள் காலத்தாலும் தேயத்தாலும் மாறுபடும் மக்கள் உடலின் கண்ணமைந்த தட்பவெப்ப நிலைகளுக்கேற்பப் பயன்படுத்தும் நீர்மையும் பெற்றுள்ளமை வியக்கத்தக்கதாகும். மருத்துவமும், அறிவியல் முறையில் வளர்ந்து வரும் மேலை நாட்டினர் கண்டுபிடிக்கும் புதிய மருந்துகளுக்குரிய மூலப்பொருள்களும் நாம் சித்தர்கள் கண்டு உரைத்தவையே ஆகும். சித்த மருத்துவம் உலகம் மருத்துவத்தின் கருவூலமாகும். (சி.கோ. தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள், ப.47)**

என்று தெய்வநாயகம் கூறியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நம் மருத்துவமுறையே உலகின் பல்வேறு மருத்துவமுறைகளுக்கு முன்னோடி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி அதனை பாதுகாக்கவும் பயன்படுத்தவும் வேண்டும்.

## மருந்து

மருந்து என்பது உடலில் தோன்றும் நோயினைப் போக்கி உடம்பை றி நலப்படுத்துவது. இது உளநோய் உடல்நோய் ஆகியனவற்றை போக்குவதாகும். நல்ல மருந்து உட்கொள்ளும்போது அது குருதி அணுக்களை தூய்மையாக மாற்றி, என்றும் இளமை நலத்தோடு வாழ வழிவகுக்கின்றது. உடலில் நோய் உண்டாகாதபடி காப்பது மருந்தாகும். அது ஏற்படாது தடுத்து இளமையோடு வாழச் செய்யும் என்று திருமூலர் கூறுகின்றார். அதாவது,

> **மறுப்பதுடல் நோய் மருந்தெனல் சாலும்**
> **மறுப்பதுள நோய் மருந்தெனல் சாலும்**
> **மறுப்பதினி நோய் வராதிருப்ப**
> **மறுப்பது சாவை மருந்தெனலாமே**

**(ப.சு. மணியன், சித்தர் நெறிகளும் சித்தி முறைகளும், ப.42)**

மனித உடலின் மனதின் குறைகளைப் போக்கி அவற்றை ஈடு செய்யும் காரணியே மருந்தாகும். மேலும்,

> **வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்**
> **நாரி மருந்தென்றும் நந்தி அருள் செய்தான்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**ஆதி மருந்தென்றறிவா அகலிடஞ்**
**சோதி மருந்திது சொல்ல ஒண்ணாதே(திருமந்திரம்,348)**

என்ற திருமூலரின் பாடல் மூலம் மருந்தின் இயல்பை அறியலாம்.

### கரு வளரும் தன்மை

கருவில் வளர் நிலைகளை மாணிக்கவாசகர் தம் போற்றித் திரு அகவல் பகுதியில் மிக நுட்பமுடன் விளக்குகிறார். உயிரானது தன்னுடைய வினைக்கேற்ப பல பிறவிகளை அடைகிறது. மனிதப் பிறவி என்பது மிக அரிதானது; அது பிறவிக்கு முன், கருவாக வளரவேண்டும்; அந்த வளர்ச்சி பத்து மாதங்கள் தோன்றி முழுமையடைகிறது.அந்த பத்து மாதம் கருவில் இருக்கும் நிலையில் உயிர் பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்கிறது. அவைகள்,

| மாதம் | வளர்ச்சி நிலை | விளக்கம் |
|---|---|---|
| 1 | தான்றிக்காய் அளவு | கருவின் ஆரம்ப வளர்ச்சி – சிறிய அலகு போல இருக்கும் |
| 2 | வலிமை அடைதல் | உறுப்புகள் உருவாக துவங்கும் |
| 3 | சுரோணித நீரில் பாதுகாப்பு | கரு சுரோணிதம் (அம்னியோட்டிக் திரவம்) மூலம் பாதுகாக்கப்படுகிறது |
| 4 | உயிர் நுழைதல் | சித்தம் நுழைவது (உயிர்/ஆன்மா கருவில் புகுதல்) – சிதசுக் காட்சி |
| 5 | கருக்கலையாமை | வளர்ச்சி நிலை உறுதி அடைவது – சீரான வளர்ச்சி |
| 6 | அவயங்கள் முறையாக அமைதல் | கண்கள், காதுகள், இதயம், நரம்புகள் போன்றவை உருவாகின்றன |
| 7–9 | துன்பங்கள், தாயின் தாக்கங்கள் | உடல், மனம் இரண்டும் வளர்கின்றன; தாயின் உணர்வுகள், உடல் நிலை தாக்கம் தரும் |
| 10 | பிறப்பு சரியான நேரத்தில் வெளியேறும்; | பிறவியின் ஆரம்பம் |


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

இதனை,

**"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்ததும்"**

**(திருவாசகம், போற்றித் திருவகவல், 13-15)**

என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஆணும் பெண்ணும் தன் காதல் மயக்கத்தால் இன்பம் துய்ப்பதால் கரு உண்டாகின்றது. இதனை,

**"ஒருமட மாதும் ஒருவனுமாகி இன்ப சுகம்தரும்**
**அன்பு பொருந்தி உணர்வு கலங்கி ஒழுகிய விந்து**
**ஊறு சுரோணிதம் மீது கலந்து**

**பனியில் ஓர் பாதி சிறு துளி மாது பண்டியில் வந்து புகுந்து**
**திரண்டு பதும அரும்பு கமடமி தென்று**
**பார்வை மெய் வாய் செவி கால் கைகள் என்று**

**உருவமும் ஆகி உயர வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும்**
**நிறைந்து மடந்தை உதரம் அகன்று புவியில் விழுந்து**
**......... .............. .....................**
**ஓரறிவு ஈரறிவாகி வளர்ந்து."** (பட்டினத்தார், உடற்கூற்று வண்ணம்)

என்று பட்டினத்தார் குறிப்பிடுகிறார்.

அருணகிரிநாதர் உயிர்களின் கரு உருவாகும் காலமானது புல்நுனி மேல் வீழ்ந்த பனித்துளி அளவிற்றாக இருக்கும் என்பதை,

**"அறுகுநுனி பனியனைய சிறிய துளி பெரியதொரு**
**ஆகமாகி" (திருப்புகழ், 858)**

என்று கூறியுள்ளார்.

திருமூலரின் திருமந்திரம் எனும் நூல் கரு உருவாக்கம் பற்றி மிகத் தளிவாக எடுத்துரைத்துள்ளது. அதன் இரண்டாம் தந்திரத்தின் பதினான்காம் அதிகாரத்திலுள்ள


http://Creativecommons.org//license/by/4.0/.

பாடல்கள் தாய், தந்தையரின் அணுக்கள் எவ்வாறு குழந்தையை உண்டாக்குகிறது என்பதை எடுத்துரைக்கின்றது. அவை,

**“ஆதினம் ஆருயிர் கரு உருவாகும்**
**விதங்கள் ஆக்குகின்றான்**
**கர்ப்பக் கோளனாக உள்ளிருந்து.”** (திருமந்திரம், 436)

**“புருடன் உடலில் பொருந்து மற்று, ஓரார்**
**திருவின் கருக்குழி தேடிப் புகுந்தது**
**உருவம் இரண்டாக ஓடி விழுந்தது.”** (439)

**“விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி**
**ஒழிந்த முதல் ஐந்தும்.”** (திருமந்திரம், 440)

**“பூவும் மொட்டும் பொருந்த, அலர்ந்த பின்**
**காவுடைத் தீபம் (கரு) கலந்து பிறந்திடும்.”** (திருமந்திரம், 464)

என்ற பாடல்களின் மூலம் அறியலாம். மேலும், கரு உண்டானபின் அதன் வளர்ச்சி நிலைகள் குறித்தும் அது ஒன்றுபட்டு உடம்பாதல் குறித்தும் பத்து மாதம் கழித்து குழந்தையாக இம்மண்ணில் பிறப்பெடுத்தல் குறித்தும் திருமந்திரம் விரிவாக எடுத்துரைக்கின்றது என்பதை இதன்வழி அறியலாம்.

இந்த கருவிற்கு தூல உடன்பாடல் பற்றி திருமூலர் வாழ்க்கைத் துணைகளான காதலர்கள் அன்பினால் இன்புறுவதே கருவுருதுலின் அடிப்படை. அப்போது அவர்கள் கூடுவதால் இலிங்கமாகிய உருவுடம்புக்கு வாயிலாம் வித்துப் புகுந்தது. அதனை ஏற்றுக்கொள்ள கருவழியாகிய யோனி விரிந்தது. உடலில் தங்கியிருந்த ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் அறிதற் கருவி ஐந்து, செய்தற் கருவி ஐந்து ஆகப் பத்தினுடன் கூடிய மழையாகப் பொழியும் நீர்முதலாகச் சொல்லப்படும் பூதங்கள் ஐந்தும் உருவாகின. அவற்றால் போற்றப்படும் கரணங்களும் கூடின. புருவ நடுவிலும் உச்சியிலும் நின்று உணரும் தொழிலும் இடையறாது நிகழ்வதாயிற்று. அறிதற் கருவி; செவி, மெய், கண், நாக்கு, மூக்கு.


http://Creativecommons.org//license/by/4.0/.

செய்தற் கருவி; வாய், கால், கை, எருவாய், கருவாய், கரணம்; எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு. அறிவு நிகழ்தற்கு நிலைக்களம் புருவநடுவும் உச்சியும் என்ப. என்பதை,

**விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி**

**ஒழிந்த முதல் ஐந்தும் ஈரைந்துாடறிப்**

**பொழிந்த புனல் பூதம் போற்றுங் கரணம்**

**ஒழிந்த நுதல் உச்சி உள்ளே ஒளிந்ததே (திருமந்திரம், 455)**

என்று கூறியுள்ளார். எலும்பினைக் கழிகளாகவும், நரம்பினைக் கயிறுகளாகவும், குருதியாகிய நீராற் பிசைந்த இறைச்சியாகிய மண்ணைச் சுவர்களாகவும் அமைத்து, உயிர் வாழ்வதற்கு உடலை இல்லமாக இறைவன் ஆக்கி தந்துள்ளான். இதனையே திருமூலர்,

**என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்**

**செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து (திருமந்திரம், 461)**

என்று பாடுகிறார்.

கரு உருவாதற்காக பலகூட்டுப் பொருட்கள் பதிவிற்கு முன்பு, அப்பொருள்களில் அவர் உடம்புகளிலே பல கூட்டுப் பொருள்கள் வந்துசேர, கருப்பதிந்த பின் கருவிற்கு குணங்கள் அமைகின்றன. இவ்வாறு கருவில் அமைந்த உயிருக்குச் சூக்கும உடம்பும், வாக்குகளும் வந்தமைகின்றன. இதனை சிவவாக்கியர்,

**அன்னை கர்ப்ப அறை அதற்குள் அங்கியின் பிரகாசமாய்**

**அந்தறைக்குள் வந்திருந்து அரிய விந்து ரூபமாய்**

**தன்னை ஒத்து நின்றபோது தடையறுத்து வெளியதாய்**

**தங்க நற்பெருமை தந்து தலைவனாய் வளர்ந்ததே**

**(சிவவாக்கியர், சித்தர் ஞானகோவை, அறிவுநிலை, 239)**

என்று பாடுகிறார்.

பெண்ணின் கருக்குழியில், ஆணின் ஜீவ அணுக்கள் ஓடிவிழுந்து இரண்டாகும் என்பது இன்றைய அறிவியலோடு ஒத்து நிற்கிறது. ஆண், பெண் உறவு கலந்து கரு உருவாகும் நிலையைப் பற்றிக் கூறும் போது,

**“சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்**

**அக்கிர மத்தே தோன்றும் அவ் யோனியும்**




http://Creativecommons.org//license/by/4.0/.

**புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால் விரல்**

**சுக்கிரம் எட்டும் சாணது ஆமே." (திருமந்திரம், 464)**

என்ற பாடலில் ஆணின் உயிரணுவும், பெண்ணின் உயிரணுவும் வெளிப்பட்டு, பெண்ணின் உயிரணுவுடன் கலந்து எண் சாண் உடம்புக்கு வழி வகுக்கும் என்று திருமூலர் கூறியுள்ளார்.

## ஆண், பெண் தோற்றம்

பெண்ணின் கருப்பையில் குழந்தை உருகொள்வதற்கு ஆணின் உயிர்ச்சத்து எனப்படும் குரோமோசோம்களே ஏதுவாக இருப்பதாகத் தற்கால மருத்துவ அறிவியல் தெரிவிக்கின்றது. அதாவது, பெண்ணின் கரு அணுவிலுள்ள 44 பண்பினக் கூறுகளும், பாலினக் கூறும், ஆணின் 44 பண்பினக் கூறும், + XX பாலினக் கூறும் சேரும் போது, பிறக்கும் குழந்தை தந்தையின் கூறும் சேர்ந்து (44 + XY) ஆணாகவும், தாயின் பாலினக் கூறும் சேர்ந்து (44 + XX) பெண்ணாகவும், இதில் பாலினக் கூறு தவறுகளால் அலியாகவும் உண்டாகும் என்பதை இன்றைய மருத்துவ அறிவியல் கூறுகிறது. இதே கருத்தை திருமூலர்,

**"பூண்டது மாதா பிதா வழிபோலவே**

**ஆம்பதி செய்தான் அச்சோதி தன் ஆண்மையே." (திருமந்திரம்: 461)**

**"ஆண்மிகில் ஆணாகவும், பெண்மிகில் பெண்ணாகவும்,**

**பூண் இரண்டும் ஒத்துப் பொருந்தில் அலியாகும்." (திருமந்திரம்: 462)**

என்று கூறுவதில் இருந்து தமிழ்ச் சித்தர்கள் கரு உண்டாவது குறித்தும் அக்கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்பதைக் குறித்தும் அறிந்திருந்தனர் என்பது நமக்கு வியப்பதைத் தருகிறது.

## ஆயுளும் ஊனமும்

மண்ணில் தோன்றிய ஒவ்வொரு உயிரும் மறைவது என்பதே உலக இயற்கை. ஆனால், அந்த மறைவை தடுத்து நெடுங்காலம் நம்மை வாழ வைக்கக் கூடியவைகள் மருந்துகள். அதிலும் சித்த மருந்துகள் இதில் தனித்துவமானவைகள். ஒவ்வொரு குழந்தையின் குணநலன்களையும் உடல் நலன்களையும் உருவத்தினையும் முடிவு செய்யக் கூடியவைகள் மரபணுக்களே ஆகும். இதனை,

**பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்**

**பாய்ந்தபின் னாலோடியில் பாரனில் என்பதாம்**

**பாய்ந்திடும் வாயும் பகுத்தறிந் தவ்வகை**



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**பாய்ந்திடும் யோகியர்க்குப் பாய்ச்சலும் மாமே (திருமந்திரம், 479)**

என்று திருமூலர் கூறியுள்ளார்.

இதில் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் எவ்வாறு குழந்தை பிறக்கும். அவ்வாறு பிறந்த குழந்தை எவ்வளவு காலம் வாழும் என்பதை எல்லாம் கருத்தரிக்கும் விதங்கொண்டே கணக்கிட்டுள்ளனர். அதாவது, விந்தணுவானது ஆணிடமிருந்து பிரிந்து ஐந்து விரற்கடை ஓடி விழுந்தால் பிறக்கும் குழந்தை நூறாண்டு வாழும் என்றும், நான்கு விரற்கடை ஓடி விழுந்தால் பிறக்கும் குழந்தை எண்பதாண்டு வாழும் என்றும் கூறுவதிலிருந்து திருமூலரின் கரு பற்றிய விரிவான பார்வைப் புலப்படுத்துகின்றது. மேலும்,

**“மாதா உதிரம் மல்மிகில் மந்தனாம்**
**மாதா உதிரம் சலமிகில் மூங்கையாம்**
**மாதா உதிரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதிரத்தில் வந்த குழவிற்கே” (திருமந்திரம் 481)**

என்பதில், தாயார் வயிற்று மலம் முழுவதுமாக கழியாமல் தங்கியிருந்தால் குழந்தை மந்தமாகவும், சிறுநீர் அதிகமாக கழிந்தால் குழந்தை ஊமையாகவும், இரண்டுமே இருந்தால் குருடாகவும் பிறக்கும் என்கிறார் திருமூலர்.

## சித்த மருத்துவம் வளர்ச்சி எய்தாமைக்கான காரணம்

சித்த மருத்துவம் என்பது மரபு வழிப்பட்டது. இதனை ஓர் ஆசிரியன் தன் மாணாக்கனுக்கு கற்பிக்க அதனை அம்மாணவன் மற்றவர்களுக்கு தெரிவிக்கலாகாது எனக் கருதினர். இதனை,

**ஞான முக்தி யென்றனுக்கு எபதேசித்த**
**நந்தீசர் திருவாக்கு நவிலக் கேளு**
**மானமுத்தி செந்தூரம் வயித்தி யர்க்கும்**
**வண்டருக்கும் கசடறுக்கும் வெளியிடாதே**
**ஈனமுள்ள சண்டாளர்க்கு ஈய வேண்டாம்**
**இன்பமுடன் நூல் வைத்து இருந்தோர் பாதம்**
**தானமுக்தி தொண்டு செய்வேன் தமக்கேயீந்தால்**
**தர்ம முண்டு கர்மமில்லை சான்றக்கேளே!**


http://Creativecommons.org//license/by/4.0/.

**(சி.கோ. தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள். ப.54)**

எனும் பாடல் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இதனால் பல்வேறு மருந்துகளும் சித்த மருத்துவத்தில் நிலைபெறாமல் போயின. அதுமட்டுமன்றி போதுமான வருவாய் இல்லாத காரணத்தினால் மரபுவழி சித்த மருத்துவர்கள் வேறு பணி நாடி சென்றமையால் இவை அழிவுக்குள்ளாயின.

## முடிவுரை

சித் எனும் வேர்ச்சொல்லில் இருந்து உருவானதே சித்தர் எனும் சொல். சித்தர்கள் என்றால் மனதை கட்டுப்படுத்தும் சித்தியை உணர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கண்டறிந்த மருத்துவ முறையையே நாம் சித்த மருத்துவம் என்கிறோம். இவர்கள் இயற்றிய இலக்கியத்தை சித்தர் இலக்கியம் என்கிறோம். இவ்விலக்கியங்களில் பயின்றுவந்துள்ள பிள்ளைப்பேறு குறித்த செய்திகளை கரு வளர்ச்சி, ஆண் பெண் உருவாதல், நீண்ட ஆயுளும் ஊனமும் குறித்த செய்திகள் வழி அறிந்தோம். மேலும், இன்றைய மருத்துவத்தில் சித்த மருத்துவம் வளராமைக்கான காரணிகளையும் இக்கட்டுரை வழி அறிந்தோம். இனி இம்மருத்துவ முறையை வளர்ச்சியடைய வேண்டுமெனில் கிராமங்களில் உள்ள மரபுசார் சித்த மருத்துவர்களைக் கண்டறிந்து அவர்கள் பயன்படுத்திவரும் மருந்துகளையும் மருத்துவமுறையும் முறையாக சேகரித்து அவைகளை ஆவணப்படுத்துதல் வேண்டும். அதுமட்டுமன்றி அவற்றை இளைய தலைமுறைக்கு போதிக்கவும் வேண்டும். சித்த மருத்துவம் என்பது எல்லா மருத்துவ முறைகளைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை உணர செய்ய பல்வேறு கருத்தரங்குகள் பயிலரங்குகள் நடத்தப்படுதல் வேண்டும். கொரோனா நோய் தொற்று காலத்தில் நம்மை எல்லாம் காத்தது சித்த மருத்துவமே என்பதை மறத்தல் கூடாது.

## துணை நூற்பட்டியல்

1. இராமநாதன். அரு. (பதி.), சித்தர் பெரிய ஞானக்கோவை, சித்தர் பாடல்கள், பிரேமா பிரசுரம், சென்னை,1959.
2. உத்தமராயன். க.சு., தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம், சென்னை, 1978.
3. கோவிந்தன். த., (பதி.), சித்தர் பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1987.


http://Creativecommons.org//license/by/4.0/.

4. தெய்வநாயகம். சி.கோ., சித்தர் சிந்தனைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.
5. மணியன். ப.சு., சித்தர் நெறிகளும் சித்தி முறைகளும், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 2012.
6. மஹாதேவயோகி, பட்டினத்தடிகள் அருளிச் செய்த திருப்பாடற்றிரட்டு, பி. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், சென்னை. ப.தி.ஆ. இல்லை.
7. மாணிக்கம் (உ.ஆ), திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2001.
8. வெங்கடேசன். ந, சித்தர் இலக்கியங்களில் வாழ்வியல் (தொகுதி 1-10), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 2014.
9. வெள்ளைவாரணனார். க., பன்னிருதிருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். 1969


http://Creativecommons.org//license/by/4.0/.